### விமானநிலையத்துக்கு நேரடி ரெயில் சேவை:

# வண்ணாரப்பேட்டை - திருவொற்றியூர் விம்கோ நகர் மெட்ரோ ரெயில் பாதை

## ஏப்ரலில் சோதனை ஓட்டம்; ஜூனில் பயணிகள் சேவைக்கு திட்டம்

சென்னை, மார்ச்.10-

வண்ணாரப்பேட்டை-திருவொற்றியூர் விம்கோநகர் இடையிலான மெட்ரோரெயில்பாதையில் ஏப்ரல் அல்லது மே மாதம் சோதனை ஓட்டம் நடத்தவும், ஜூன் மாதம்பயணிகள்சேவை தொடங்கவும் திட்டமிடப்பட்டு உள்ளது. விமான நிலையத்துக்கு நேரடியாக ரெயில் இயக்கப்படும் என்று அதிகாரிகள் கூறினார்கள்.

### வண்ணாரப்பேட்டை-திருவொற்றியூர்

சென்னை, மெட்ரோ ரெயில் திட்டத்தின் முதல் கட்ட பணிகள் நிறைவடைந்து 45 கிலோ மீட்டர் தூரம் மெட்ரோ ரெயில்கள் இயக்கப்பட்டு வருகிறது. இதனை தொடர்ந்து வண்ணாரப்பேட்டையில் இருந்து திருவொற்றியூர் அடுத்து உள்ள விம்கோ நகர் வரை 9.02 கிலோ மீட்டர் தொலைவிற்கு நீட்டிக்கும் பணிகள் ரூ.3 ஆயிரத்து 770 கோடி செலவில் நடந்து வருகிறது. இந்தப்பணிக்கு கடந்த 2016-ம் ஆண்டு மறைந்த முதல்-அமைச்சர் ஜெயலலிதா அடிக்கல் நாட்டினார். தொடர்ந்து அந்த ஆண்டு ஜூலை மாதம் பணிகள் தொடங்கின.

முதல்கட்ட நீட்டிப்பு பணிகளில் சுரங்கப்பாதையில் சர். தியாகராயர் கல்லூரி மெட்ரோ ரெயில் நிலையம் மற்றும் கொருக்குப்பேட்டை நிலையம் ஆகிய இரண்டு ரெயில் நிலையங்கள் மற்றும் உயர்மட்டப்பாதையில் தண்டையார்பேட்டை, சுங்கச்சாவடி, தாங்கல், கவுரி ஆசிரமம், திருவொற்றியூர், விம்கோ நகர் ஆகிய 6 ரெயில் நிலையங்களும் அமைக்கும் பணி போர்க்கால அடிப்படையில் நடந்து வருகிறது. இந்தப்பணி அடுத்த மாதம் (ஏப்ரல்) நிறைவடைந்த உடன் சோதனை ஓட்டத்தை நடத்தவும் அதிகாரிகள் திட்டமிட்டு உள்ளனர்.

### தண்டவாளம், சிக்னல் அமைக்கும் பணி

இதுகுறித்து சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது:-

வண்ணாரப்பேட்டையில் இருந்து 1கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள சர்.தியாகராயர் கல்லூரி, அங்கிருந்து 1 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள கொருக்குப்பேட்டை ரெயில் நிலையம் வரை 2 கிலோ மீட்டர் தூரத்துக்கான சுரங்கம் தோண்டும் பணி முற்றிலுமாக நிறைவடைந்து விட்டன.

தற்போது இந்த 2 சுரங்க ரெயில் நிலையத்துக்கு செல்லும் வழிகள் மற்றும் சுரங்கத்தில் தண்டவாளம் அமைக்கும் பணி, சிக்னல் அமைப்பதற்கான பணிகள் நிறைவடைந்து உள்ளன.

எட்டி உள்ளன.

கோயம்பேடு முதல் ஆலந்தூர் வரை உள்ள சாலை 100 அடி அகலமான சாலையாக இருந்ததால், அப்பகுதியில் மெட்ரோ ரெயிலுக்கான உயர்த்தப்பட்ட பாதை கிரேன்கள் உதவியுடன் பாதை எளிதாக அமைக்கப்பட்டது. ஆனால் தோல்கேட்டில் இருந்து திருவொற்றியூர் விம்கோ நகர் வரை உள்ள 7 கிலோ மீட்டர் தூரம் கொண்டசாலை, குறுகலான சாலையாக இருப்பதால் இந்த சாலையில், உயர்த்தப்பட்ட பாதை அமைப்பது சவாலாக இருக்கிறது.

### பாலம் கட்டும் நவீன எந்திரம்

இந்தப்பாதையில் உள்ள சாலையில் கிரேன்கள் மற்றும் அதிக நீளம் கொண்ட டிரைலர் வாகனங்களை கொண்டு வந்து பணி செய்ய முடியாது என்பதால், நாட்டிலேயே முதன் முறையாக 'லான்ஜிங் கிரிடர்' என்று அழைக்கப்படும் ஒரு வகையான பாலம் கட்டும் நவீன எந்திரம் மூலம் நவீன தொழில் நுட்பத்தில் ஒரு இடத்தில் இருந்தபடியே 'சிமெண்ட் சிலாப்புகள்' கொண்டு சென்று உயர்த்தப்பட்ட பாதை அமைக்கும் பணி நடந்துவருகிறது.

குறிப்பாக ஒரு தூணுக்கும் மற்றொரு தூணுக்கும் இடையே முன்னேறி செல்லும் நவீன எந்திரம் மூலம் இந்த பாதை அமைக்கப்படுகிறது. பொதுவாக நெடுஞ்சாலை மற்றும் அதிவேக ரெயில் பாலம் கட்டுமானத் திட்டங்களுக்கான சிமெண்ட் பாக்ஸ்கள் நிறுவ இந்த தொழில் நுட்பம் பயன்படுகிறது.

### ஏப்ரலில் சோதனை ஓட்டம்

முதல்கட்டத்தில் உயர்த்தப்பட்ட பாதையின் அருகில் சாலையின் ஓரத்தில் ரெயில் நிலையங்கள் அமைக்கப்பட்டு உள்ளன. இதனால் அதிக அளவில் நிலங்கள் தேவைப்பட்டன. இதற்காக கூடுதல் நிதியும் செலவிடப்பட்டது. ஆனால் விரிவாக்கப் பணியில் உயர்த்தப்பட்ட பாதையின் கிழே ரெயில் நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்த திட்டத்திற்கான செலவு முற்றிலும் குறைக்கப்பட்டு உள்ளது. குறிப்பாக முதல் கட்டத்தில் சுரங்கப்பாதையில் உள்ள ரெயில் நிலையங்கள் 220 மீட்டர் நீளமும், 27 மீட்டர் அகலத்திலும் அமைக்கப்பட்டன. ஆனால் விரிவாக்கத்தில் அனைத்து ரெயில் நிலையங்களும் 148 மீட்டர் நீளமும், 20 மீட்டர் அகலத்திலும் அமைக்கப்பட்டு உள்ளது. இதனால் இடம் மற்றும் கட்டுமான செலவினங்கள் முற்றிலும் குறைந்து உள்ளது. தற்போது, இந்த தடத்தில் முக்கிய பணியான தண்டவாளங்கள், சிக்னல்கள் அமைக்கும் பணி நிறைவடையும் நிலையில் உள்ளன. சுமார் 20 சதவீதம் வரையில் செலவுகளை குறைக்கும் வகையில் பல நடவடிக்கை எடுத்து வருகிறோம். ஆனால், பாதுகாப்பு விஷயங்களில் எந்த குறைபாடும் இருக்காது.

வரும் ஏப்ரல் இறுதி வாரம் அல்லது மே முதல் வாரத்தில் இந்தப்பாதையில் சோதனை ஓட்டம் நடத்த திட்டமிடப்பட்டு உள்ளது. தொடர்ந்து ஜூன் மாதம் ரெயில் இயக்க வாய்ப்பு உள்ளது. திருவொற்றியூர் விம்கோ நகரில் இருந்து விமானநிலையத்துக்கு நேரடியாக ரெயில் இயக்கப்படும்.

### இறுதிகட்டத்தில் பணிகள்

முதல்கட்ட விரிவாக்கதிட்டத்தில், எஞ்சியுள்ள பணிகளை, ஒப்பந்ததாரர்கள் விரைவாக முடிக்க, திட்ட அதிகாரிகளின் ஆய்வு கூட்டத்தில் முடிவு செய்து, ஒப்பந்ததாரர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு உள்ளது. இதனால், இரவு, பகலாக பணிகள் நடந்து வருகின்றன. மூன்று நாட்கள் செய்ய வேண்டிய வேலையை, ஒரே நாளில் முடிக்கும் வகையில், ஒப்பந்த நிறுவனங்கள் திட்டமிட்டு, பணிகளை துரிதப்படுத்தி உள்ளன. இதனால், இப்பாதை கட்டுமான பணிகள், ஏப்ரலில் முடிக்கப்படும்.

மெட்ரோ ரெயில் நிறுவனத்திற்கு, தற்போது, 42 ரெயில்கள் உள்ளன. இதில் 35 ரெயில்கள், போக்குவரத்திற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தற்போது கூடுதலாக 10 ரெயில்கள் வாங்க ஒப்பந்தம் போடப்பட்டதில் 3 ரெயில்கள் வந்து உள்ளன. மேலும் 1 லட்சத்துக்கும் மேற்பட்ட பயணிகள் தினசரி கையாளப்பட்டு வருகின்றனர். திருவொற்றியூர் விம்கோ நகர் வரை நீட்டிப்பு செய்தால் கூடுதலாக பயணிகள் வர வாய்ப்பு உள்ளது. அதனையும் திறமையாக கையாளுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு அதிகாரிகள் கூறினார்கள்.

### சவாலாக உள்ள உயர்த்தப்பட்ட பாதை

கொருக்குப்பேட்டை ரெயில் நிலைய பணிகளுக்கு இடையே, டோல்கேட் பகுதியில் இருந்து உயர்த்தப்பட்ட பாதை மற்றும் ரெயில் நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகிறது. இதில் டோல்கேட்டில் இருந்து கவுரி ஆசிரமம் வரை உள்ள பணிகள் நிறைவடையும் நிலையை